[15th December 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : பாலாற்றங்கரை மாத்திரம் அல்ல; செய்யாற்றங்கரையில் உள்ள கிராமங்களும் அநேகமாக இருக்கின்றன. இந்த திட்டமே மத்திய சர்க்கார் திட்டம்; அவர்கள் வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், எந்தெந்த வேலைகள், "ஸ்பில் ஓவர்", முடியா விட்டாலும், அவற்றை முடிக்கிற உரிமை நமக்கு உண்டு. இந்த திட்டத்தின் கீழ் இல்லாவிட்டாலும், தனியாக ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின் கீழ் எடுக்கலாம். இந்த திட்டம் இல்லை என்றால், அதற்காக குடிதண்ணீர் வசதி செய்யமாட்டார்கள் என்பதில்லை.

Cement

* 2408 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have any proposal to allow the Panchayat Presidents and Block Development Officers to issue permits for the purchase of cement instead of Revenue officials?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI M. S. SELVARAJAN : ஸார், சிமன்ட் பர்மிட்டுகள் மூலம் கொடுப்பதில் சிரமங்கள் இருப்பது சர்க்காரின் கவனத் திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால், சிரமத்தைப் போக்க, பரிசிலனை செய்திருக்கிறதா? என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சிமெண்ட் விநி யோகம் செய்வதில் பர்மிட் கொடுத்து, 80 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்றும், 20 சதவிகிதம் ஸ்டாகிஸ்டுகள் மூலமாக வழங்குகிறவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை அரசாங்கத்திலேயே பூராவையும் பர்மிட் மூலம் கொடுக்க லாமா என்று பரிசிலனை செய்கிறோம். கனம் அங்கத்தினரின் முதல் கேள்விப்படி, பஞ்சாயத்து போர்டு ப்ரெஸிடெண்ட், டெவலப்மெண்ட் ஆபீஸர் இவர்களிடம் கொடுத்தால், அவர்கள் பெயர்தான் கெட்டுப்போகும். வேறு வழியில் கொடுக்க வேண்டும்.

Scholarships to students

* 2409 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1960 வரை நமது ராஜ்யத்தில் மாணவர் களுக்கு கல்விச் சலுகை, ஸ்காலர்ஷிப் முதலியவை எந்த அளவுக்கு அளிக்கப்பட்டது?

(இ) ஹரிஜன மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் எவ்வளவு பேர்?

(உ) மத்திய சர்க்கார் உதவி எவ்வளவு? ராஜ்ய சர்க்கார் உதவி எவ்வளவு?

15th December 1961]

(எ) 1961-62-வது ஆண்டுக்கு அதிகமாக்க மத்திய சர்க்காரை கேட்கப்பட்டுள்ளதா? எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN: (அ), (இ), (உ) & (எ) A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், 1957-க்கு முன்னல் இருந்த பாடசாலைகளைவிட, இப்பொழுது 1960-61 வருஷம் வரை பார்த்தால், பள்ளிக்கூடங்கள் அதிகமாக ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், ஸ்காலர்ஷிப்புகள், 1957-ல் இருந்ததைவிட இப்பொழுது மிகக்குறைவாக இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காரை மேலும் அதிகப் படுத்துவதற்கு ராஜ்ய சர்க்கார் வற்புறுத்துமா? ராஜ்ய சர்க்காரினுலும் அதிகப்படியாகப் பணம் ஒதுக்கப்படுமா? 9-30 a.m.

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினருக்குக் கொடுத்திருக்கும் பதிலைப் பார்த்தால் தெரியும். அதன்படி, 57-58-ல் ரூ. 51,78,000 சொச்சமும், 58-59-ல் ரூ. 58,50,000 சொச்சமும், 59-60-ல் ரூ. 70,28,000 சொச்சமும், நடப்பாண்டில் ரூ. 88 லட்சமும் கொடுத்திருக்கிறோம். அதிலிருந்து தெரியும் குறைக்கவில்லை, ஜாஸ்திதான் ஆகியிருக்கிறது என்று.

DEPUTY SPEAKER: I think the House has no objection to my taking up some more time and finishing the rest of the questions.

SRI V. K. KOTHANDARAMAN: 1957-ல் கொடுத்ததைவிட இப்பொழுது 1960-61-ல் குறைந்துபோய் விட்டது என்று நான் சொல்லவில்லை. ஸ்டேட்மெண்டிலே அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனல் 1957-ல் இருந்த பாடசாலைகளைவிட 1960-61-ல் அதிகமான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மாணவர்கள் அதிகப்படியாக இருக்கும்பொழுது, ஸ்காலர்ஷிப்பும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அந்த அளவுக்கு உயர்த்தவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அந்த அளவுக்கு அதிகப்படியாகப் பணம் ஒதுக்கப்படுமா?

THE HON. P. KAKKAN: எவ்வளவு தூரம் மாணவர்கள் படிக்க வருகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்துத் திட்டமிட்டு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். நிதி நிலைமைக்கு தக்கவாறு பின் தங்கிய வகுப்பினருக்கும், ஹரிஜன மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுத்துக்கொண்டு வருகிறோம். போதாததற்கு மத்திய சர்க்காரிடம் கேட்டுக்கொண்டு வருகிறோம். நிதி அமைச்சர் அவர்களிடமும் கேட்டு, எவ்வளவு கொடுக்க முடியுமோ, அவ்வளவு கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

SRI T. IRUSAPPAN: விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போவதினுல் இப்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகை போதவில்லை என்று சொல்லப் படுகிறது. ஆகவே அதை அதிகப் படுத்த உத்தேசம் உண்டா?

TKE HON. SRI P. KAKKAN: இதை பரிசிலனை செய்துதான் ஆர்ட்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு எவ்வளவு, மெடிகல் கல்லூரி

---

a Printed as Appendix XI on pages 1103–1104 infra.

மாணவர்களுக்கு எவ்வளவு, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு எவ்வளவு என்று திட்டம் போட்டு அதன்படி கொடுக்கிறோம். பின்னர் நிதி நிலைமை இடம் கொடுத்தால் உயர்த்துவதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Sri S. NAGARAJA MONIGAR: பள்ளிக்கூடங்களை ஒன்றுக்கு இரண்டாக அதிகரித்திருக்கிறார்கள் என்று சொல்லுவது ஒரு பெரிய விஷயம். அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் சர்க்கார் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் ஸ்காலர்ஷிப்பு களையும் ஒன்றுக்கு இரண்டாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அதற்கு அவகாசம் கொடுக்கவேண்டும். குதிரைக்கு "குர்ரம்" என்றால் யானைக்கு . . . . (சிரிப்பு.)

DEPUTY SPEAKER: It is not a question. The Hon. Member is expressing an opinion.

Sri K. VINAYAKAM: ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்குப் போதிய அளவுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கொடுக்கும்போது, ஒரு குறிப்பிட்ட விகிதாசார அளவுக்கு மார்க்குகள் வாங்கவேண்டு மென்று வைத்திருப்பதனால், பலருக்குக் கிடைக்காமல் போகிறது. பெண்டிங் அப்ளிகேஷன்களை பொறுத்தவரையில் நிதி அமைச்சர் அவர்களிடம் மூன்று லட்சம் ரூபாய் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கு இசைந்துள்ளாரா? இன்று கடைசி நாள். இன்றாவது கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொள்வார்களா? இதைப்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்களின் விருப்பம் என்ன என்பதை தெரிவிக்க முடியுமா?

The Hon. Sri P. KAKKAN: ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்த வரையில் ஹரிஜன மாணவர்களைவிட பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறோம். மாநில சர்க்காரால் கிட்டத்தட்ட அரைக் கோடி ரூபாய் இந்த மாணவர்களுக்காகக் கொடுத்து வருகிறோம். 'பாக்வார்ட் கம்யூனிட்டி' மாணவர் கள், எஞ்சினியரிங் கல்லூரி, மெடிகல் கல்லூரி போன்ற கல்லூரிகளில் அதிகமாகப் படிப்பதால், அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. நிதி இலாக்காவிற்கும் எழுதி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். மேற்கொண்டு என்னிடத்தில் தகவல் இல்லை.

Sri K. PERIANNAN: பின்தங்கிய ஹரிஜன மாணவர்களுக்கு சட்டக் கல்லூரி, மேலும் எல்.டி., எம்.ஏ. போன்ற டிகிரிகளுக்கு குறிப்பிட்ட 10 நபர்களுக்குத்தான் உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று இருப்பது மிகவும் குறைவானது என்று அரசாங்கம் கருதுகிறதா? அதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

The Hon. Sri P. KAKKAN: ஹரிஜன மாணவர்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து நேரடியாக பட்டப் படிப்பிற்கோ, மற்ற வகை யான படிப்புகளுக்கோ கூடுதலாக ஸ்காலர்ஷிப் கொடுக்கப்

15th December 1961]

படுகிறது. மத்திய சர்க்காரிலே மார்க்குகளைப் பார்ப்பது இல்லை. ஆனால் பாக்வார்டு கம்யூனிட்டிகளுக்கு ஆண்களுக்கு 60 சத விகிதமும், பெண்களுக்கு 50 சதவிகிதமும் என்றிருக்கிறது. இப்பொழுது பாக்வார்டு கம்யூனிட்டி குழந்தைகளுக்கு எம்.ஏ. டிகிரி படிப்பிற்காக 40 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கிறோம். ஹரிஜனக் குழந்தைகளுக்கும் எவ்வளவு கொடுக்கமுடியுமோ அவ்வளவு கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அமைச்சர் அவர்கள் பதிலில், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அதிகமான சலுகை கொடுப்பதாகவும், ஹரிஜனங்களுக்கு கொஞ்சம் குறைவாகக் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. பிற்பட்ட வகுப்பினருக்கு ஏன் அதிகமாகக் கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு ஏன் குறைவாகக் கொடுக்கவேண்டும் ?

THE HON. SRI P. KAKKAN : பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்வித் துறையில் மட்டும்தான் ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கிறோம். ஆனால் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்குப் பணம் கொடுக்கிறோம், கிணறுகள் வெட்டுவதற்குப் பணம் கொடுக்கிறோம். மற்றும் பல வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். ஆனால் பிற்பட்ட வகுப்பினருக்குக் கொடுப்பது என்று சொன்னால் இந்த ஸ்காலர்ஷிப்பைத்தான் அதிகமாக அளித்து வருகிறோம். மற்றும் ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களிலே "டிநோட்டட்" டிரைப்களுக்கு ஹரிஜனங்களுக்கு கொடுக்கும் சலுகையைக் கொடுத்து வருகிறோம். ஆனால் பாக்வர்ட் கம்யூனிட்டிகளுக்கு இந்த ஸ்காலர்ஷிப் தான் கொடுத்து வருகிறோம்.

SRI K. R. VISWANATHAN : மத்திய அரசாங்கத்திடம் 10 லட்சம் ரூபாய் நமது அரசாங்கம் பிற்பட்ட மக்களுக்காகக் கேட்டு அவர்கள் கொடுக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாகாணத்திலே பிற்பட்ட வகுப்பினருக்கு அதிகச் சலுகை வழங்கப்படுகிறது. மற்ற மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்தில்தான் பிற்பட்ட வகுப்பினருக்கு அதிகச் சலுகைகள் தேவைப்படுகின்றன. ஆகவே இதை மறுபடியும் வற்புறுத்தி அடிஷனல் அலாட்மென்டாக 10 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்குவதற்கு நமது சர்க்கார் முயலுமா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கத்திற்கு இன்னும் பத்து லட்சத்திற்கு எழுதினோம். அதில் 3 லட்சத்து சொச்சம் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் எவ்வளவோ உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் உதவி கிடைக்காவிட்டால், மாநில சர்க்கார் உதவி கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறார்கள்.

SRI T. S. RAMASWAMI : 1957-58-ஐ விட 1960-61-ல் ஸ்காலர்ஷிப்புகளின் தொகை இரட்டிப்பு அதிகமாக இருக்கிறது. அந்த அளவிற்கு மாணவர்கள் அதிகமாகயிருக்கிறார்களா என்பதை

[15th December 1961

அறிய விரும்புகிறேன். ஸ்டேட் ஸ்காலர்ஷிப் 28 லட்சத்திலிருந்து 60 லட்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் இது கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன மாணவர்களில் சிலர் விண்ணப்பம் போடும்பொழுது சில டிபெக்டுகள் இருக்கின்றன. அந்த மாதிரி கேஸ்களில் கொடுப்பது கிடையாது. எந்த விண்ணப்பம் சரியாக இருக்கிறதோ அதற்குக் கொடுக்கப்படும்.

SRIMATHI SATHIYAVANIMUTHU : அமைச்சர் அவர்கள் பதிலில் பிற்பட்ட மக்களைவிட ஹரிஜன மக்களுக்குத்தான் வீட்டு மனை தருவதிலும், மற்றும் பல பொருளாதார உயர்வு கொடுப்பதன் காரணமாக கல்விச் சலுகை குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒதுக்கப்படுகிற தொகை பூரணமாக கல்விக்காகச் செலவழிக்கப்படவில்லை என்று புகார் வந்திருக்கிறதா ? எனவே சாதாரண சலுகைகளைக் குறைத்து கல்விக்கு பூரணமான சலுகையைக் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : ஸ்காலர்ஷிப் கொடுப்பதைப்பற்றி தான் நான் சொன்னேன். பாக்வர்டு கம்யூனிட்டியில் அதிகமான மாணவர்கள் இருப்பதினால் அதிகமான அளவுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். ஹரிஜன மாணவர்கள் கொஞ்சமாக காலேஜ்களிலே படிப்பதால் அவர்களுக்கு எவ்வளவு ஒதுக்கவேண்டுமோ அவ்வளவும் ஒதுக்குகிறோம். மேற்கொண்டு கொடுப்பதற்கும் முயற்சி செய்து வருகிறோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : காலேஜ்களைப் பொறுத்த வரையில் எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. ஒருவருக்குக் கூட கொடுக்காமல் இருப்பது கிடையாது. ஆனால் பாக்வர்டு வகுப்பில் ஒரு பகுதியினருக்குத் தான் கொடுக்கிறோம். பாக்வர்டு வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஹரிஜன மாணவர்கள் காலேஜில் படிப்பதைவிட பிற்பட்ட வகுப்பு மாணவர்களின் தொகை அதிகமாக இருக்கிறது. ஒரு ஹரிஜன மாணவருக்குக்கூட ஸ்காலர்ஷிப் இல்லை என்று சொல்லவில்லை. இன்னும் எத்தனை ஹரிஜன மாணவர்கள் கல்லூரிக்குப் போனாலும், அவர்கள் எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Agricultural Income-tax

* 2410 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the slab rate of Agricultural Income-tax to small landholders in the Kanyakumari district also; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) None at present.

(*b*) Does not arise.